முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1067

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.08.2022**, புதன்கிழமை

1. அப்பனே ஆறுமுக அரங்கனே
அளவில்லா சக்தி கொண்ட தேசிகனே
காப்பேன் என கலியுகத்தை மீட்க வந்த
கருணைமிக்க எந்தன் அவதாரனே
2. அவதாரனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் **15** நாள், **31.08.2022** புதன்கிழமை)
ஒப்புகொண்டு உன் வழி வந்த மக்கள்
ஓங்கார பலம்பட இந்த கலியுகத்தில்
3. கலியுகத்தில் ஞானிகளாக மாறக்கூடும்
கலி இடர்களை எல்லாம் வென்று வாழக்கூடும்
அழியாமை பெற்று உன் அருளாலே
அகிலத்தையே ஞான யுகமாக மாற்றக்கூடும்
4. கூடுகின்ற இந்த காலங்களெல்லாம்
குறைவின்றி குருபரன் என் தயவாலே
நாடெங்கிலும் நடக்க இருப்பதாலே
நாட்டிடுவேன் அரங்கன் பதம் பற்றி
5. பற்றியே உலகோர் தொடர்ந்தால் போதும்
பாருலகில் இந்த பெரும் மாற்றம்
உற்றதொரு ஆறுமுகன் என் மாற்றமாக
உயர் ஞானமாக உலகமெங்கும் நடக்கக்கூடும்
6. கூடவே அரங்கனை தொடர்ந்து வாரீர்
குறைவில்லா வாழ்வு கண்டு நாளும்நாளும்
ஈடேற்றம் ஞானவழி மிகுதி கண்டு
இனி பிறவா பேற்றை அடையக்கூடும்
7. கூடவே நடத்துகின்றேன் முருகன் யான்
குவலயத்தில் அரங்கன் வழி மாற்றத்தை
நாடெல்லாம் ஞானவான்கள் சபையாகி
ஞானிகள் ஆளும் காலம் சடுதி வரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–